## <u>கரூர் மாநகராட்சி</u>

**2024ம் ஆண்டு ஜுன் மாதம் 28.06.2024ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் சாதாரணக்கூட்டம் நடைபெறும்.அதுசமயம் பின்வரும் பொருள்கள் பற்றி முடிவு செய்யப்படும்.**

<u>பொருள்கள்</u>

**1.** இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் ந.க.எண். 047/2024/அ2, நாள்.22.05.2024 ஆம் தேதிய கடிதத்தில் 2024–2025–ம் ஆண்டிற்கு மாநகராட்சி பங்குத்தொகை ரூ.3,00,000/ செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு 2024–2025 ஆம் ஆண்டிற்கான மாநகராட்சி பங்குத் தொகை ரூ. 3,00,000 /– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மாமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1115/2021/சி1)

**தீர்மான எண்.1838** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**2.**கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தாந்தோணி கிராமம் புல எண்.582/B2Aல் மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர் 1.98.5 ஏர்ஸ் அரசு புறம்போக்கு குறிப்பு கலத்தில் கல்லூரி விடுதி என வகைப்படுத்தப்பட்டுள்ள நிலத்தில் ஹெக்டேர் 0.13.00 ஏர்ஸ் நிலத்தில் மகளிர் தங்கும் விடுதி கட்ட நில ஒதுக்கீடு செய்ய ஏதுவாக மாநகராட்சியில் நிறைவேற்றப்பட்ட தீர்மான நகல் அனுப்பி வைக்க கோரி வந்துள்ள வட்டாட்சியர், கரூர் அவர்களின் 10.06.2024ம் தேதிய கடிதம் ந.க.அ4/1724/2024 மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி தாந்தோணி கிராமம் புல எண்.582/B2Aல் மொத்த விஸ்தீரணம் ஹெக்டேர் 1.98.5 ஏர்ஸ் ‘‘அரசு புறம்போக்கு’’ குறிப்பு கலத்தில் கல்லூரி விடுதி என வகைப்பாடு செய்யப்பட்ட அரசு புறம்போக்கு நிலம் என்பதால் மேற்படி நிலத்தில் ஹெக்டேர் 0.13.00 ஏர்ஸ் பரப்பளவில் மகளிர் தங்கும் விடுதி கட்ட நில ஒதுக்கீடு செய்ய தடையின்மை சான்று வழங்கலாம். **(9004/2021/இ1)**

**தீர்மான எண்.1839** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**3.** கரூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட தோரணக்கல்பட்டி கிராமத்தில் திருவாளர்கள் பி.நல்லுசாமி மற்றும் எம்.சாந்தி ஆகிய நபர்களின் இடமான புல எண்.421/B2A1, 421/B2A3, 432/C2B1D, 432/C2B1J மற்றும் 432/C2B1O–ல் 1.7675 ஏக்கர் இடத்திற்கு நகர் ஊரமைப்பு உதவி

இயக்குநர், கரூர் அவர்களால் மனைப்பிரிவிலுள்ள சாலை மற்றும் பொது உபயோகம் இடத்தினை பத்திர பதிவு ஆவண எண்.308/2024 வாயிலாக பெற்றுக்கொண்டு கடித ந.க.எண்.N4P185QC/2024TCP நாள்.27.01.2024ல் மனைப்பிரிவிற்கு ம.வ/மா.ந.ஊ.அ(க.மா) எண்.10/2024 என எண்ணிடப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வரப்பெற்றுள்ளது மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மேற்படி மனைப்பிரிவிலுள்ள சாலைகள், மழைநீர் வடிகால் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளும் முறையாக அமைக்கப்பட்டுள்ளது என்கிற மாநகராட்சி செயற்பொறியாளர் அவர்களின் குறிப்பினை ஏற்று சாலை மற்றும் பொது உபயோக இடத்தினை பத்திரபதிவு செய்யப்பட்டுள்ளதற்கு பின்னேற்பு அனுமதி வழங்குவதுடன் மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.894/2024/எப்1)

**தீர்மான எண்.1840** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது.

4.கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 2க்குட்பட்ட வார்டு எண்.30 அண்ணா நகர் மெயின் ரோடில் புதை வடிகால் மனித ஆய்வுக்குழி எண். N 1 24 முதல் N IS(S) 1 இடையில் பதிக்கப்பட்டுள்ள 250 மி.மி விட்டமுள்ள பழுதடைந்த ஆர்.சி.சி குழாய் அரித்து குழாய் அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் சாலையில் செல்லும் வகையில் உள்ளது. எனவே பழுதடைந்த குழாய்களை அகற்றிவிட்டு புதிதாக 250 மி.மீ விட்டமுள்ள ஆர்.சி.சி குழாய்கள் அமைக்கும் பணியின் அவசியத்தினை கருத்தில் கொண்டு குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பணியினை உடன் மேற்கொள்ள தமிழ்நாடு மாநகராட்சிகளின் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் அனுமதி பெற்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற கீழ்காணும் விலைப்புள்ளிகளில் குறைந்த தொகைக்கு விலைப்புள்ளி அளித்துள்ள M/S.CVM & Co, Karurஅவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்து செலவினத் தொகை ரூ.3.80 இலட்சத்தை மாநகராட்சி வடிகால் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வா. எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/S.CVM & Co, Karur | 0.15% குறைவு |
| 2 | Thiru.M.Loganathan, Karur | 1.32% அதிகம் |
| 3 | M/S.RPS Construction, Karur | 4.47% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாநகராட்சிகளின் சட்டம் 2022 பிரிவு 57(7)ன் கீழ் அனுமதித்து பணியினை செய்து முடித்தமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம். (இ5/8618/2022)

**தீர்மான எண்.1841 பதிவு செய்யப்பட்டது**

5. கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டு விட்டதால் 2017– 2018 முதல் 2019–2020 வரை பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டள்ள வைப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு திரு பி. பன்னீர்செல்வம் ஒப்பந்ததாரர் விண்ணப்பம் செய்துள்ளார். பணிகள் முடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதால் காலம் கடந்த வைப்புத் தொகையில் உள்ள வைப்புத்தொகையினை கீழ்க்கண்டவாறு திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் பெயர் | ASD 5% | FSD 1% |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்–15ல் பாலம்மாள்புரம் கழிப்பிடத்துக்கு ஆழ்துளை கிணறு அமைத்து சின்டெக்ஸ் பொருத்தி தண்ணீர் வசதி செய்த பணி | 11880 | 2500 |
| 2 | வார்டு எண்–22ல் வடக்கு மடவிளாகம் கஸ்தூரி பாய் மகப்பேறு மையத்தில் இருப்பு அறை மற்றும் கழிவு நீர் கால்வாய் மூடி சீரமைத்தல் பணி | 49500 | 10000 |
| 3 | கஸ்தூரி பாய் மகப்பேறு மருத்துவமனை முன்புறம் மராமத்து (ம) வடிகால் கட்டுதல் பணி | 10000 | 2000 |
| 4 | கஸ்தூரி பாய் மகப்பேறு மருத்துவமனை முன்புறம் மராமத்து (ம) வடிகால் கட்டுதல் பணி | – | 2000 |
| 5 | அரசு காலனியில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் பழுதடைந்த சுற்றுவர் அகற்றிவிட்டு புதிய சுற்றுசுவர் அமைத்தல் பணி | 80000 | 16000 |
| 6 | அரசு காலனியில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்தில் பழுதடைந்த சுற்றுவர் அகற்றிவிட்டு புதிய சுற்றுசுவர் அமைத்தல் பணி | – | 16000 |
| 7 | ஆணையர் குடியிருப்பில் தரை தளம், குளியறை மற்றும் கழிப்பறை சுவர்களில் புதியதாக டைல்ஸ் பதித்தல் பணி | – | 4850 |
| | **மொத்தம்** | **151380** | **53350** |

**அலுவலகக்குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம் (5878/2023/பி6)

**தீர்மான எண்.1842** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**6.** இம்மாநகராட்சியில் திரு.ஆர்.தங்கவேல் ஒப்பந்ததாரர் செங்குந்தபுரம் 3வது கிராஸ், நரசிம்மபுரம் நடுத் தெரு, ஆதி மாரியம்மன் கோவில் தெரு, பசுபதிபாளையம் வடக்கு தெரு, அருணாசலம் நகர் கிராஸ் தெரு. AVB நகர் கிராஸ் தெரு, டீச்சர்ஸ் காலனி, அன்னை நகர், மற்றும் அங்கு நகர் கிராஸ் ஆகிய இடங்களில் பணிகளை மேற் கொண்டு பணிகள் முடித்தமைக்கு 1% ASD வைப்புத்தொகையினை திரும்ப வழங்க 2018–2019 ஆம் ஆண்டு காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டதால் தொகை ரூ.203000/– வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம் (பி6/4064/2022)

**தீர்மான எண்.1843** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**7.** கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டடு விட்டதால் 2018– 2019 முதல் 2019–2020 வரை பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டள்ள வைப்புத் தொகையினை திரும்ப வழங்குமாறு திரு பி. நல்லுசாமி ஒப்பந்ததாரர் விண்ணப்பம் செய்துள்ளார். பணிகள் முடிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதால் காலம் கடந்த வைப்புத் தொகையில் உள்ள வைப்புத்தொகையினை கீழ்க்கண்டவாறு திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் பெயர் | ASD 5% | FSD 1% |
|---|---|---|---|
| 1 | PMHSS இல் இரும்பு கதவு ஏற்பாடுகளை வழங்குதல், MHSS இல் வளைவுப் பணிகளுடன் தரையையும் மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்கான வாக்குச்சாவடியின் VOC அரசு உதவி பெறும் பள்ளியில் பகிர்வு வேலைகளையும் வழங்குதல். | 19388 | 7800 |
| 2 | பாராளுமன்றத் தேர்தல் 2019 க்கு நகராட்சி பள்ளிகளில் வாக்குச்சாவடிகளின் மின் ஏற்பாடு பணிகளை வழங்குதல். | 14000 | 5600 |
| 3 | நாடாளுமன்றத் தேர்தல் 2019 க்காக நகராட்சிப் பள்ளிகளில் உள்ள வாக்குச் சாவடிகளுக்கு குடிநீர் வசதிகளை வழங்குதல் மற்றும் பைப்லைன் வேலைகளுடன் HDPE தொட்டியை வழங்குதல் | 7968 | 3200 |
| 4 | 2019 நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குச்சாவடிகளின் திருவள்ளுவர் நகராட்சி விளையாட்டு மைதானத்தில் உள்ள ராஜலிங்க மன்றத்திற்கு அடிப்படை வசதிகள் | 8950 | 3600 |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பராமரிப்பு பணிகள். | | |
| 5 | வார்டு எண்.2ல் உள்ள இந்திரா நகரில் அறையுடன் கூடிய பாதாள சாக்கடை குழாய் வழங்குதல் | – | 10000 |
| 6 | வார்டு எண்.13ல் உள்ள செங்குந்தர் நகரில் சிமென்ட் கான்கிரீட் சாலையுடன் கூடிய RCC கல்வெட்டின் மறு கட்டுமானம் | 8750 | 1750 |
| 7 | கரூர் நகராட்சியின் வார்டு எண்.5ல் உள்ள விஜய் நகர் மெயின் ரோடு மற்றும் இரண்டாவது குறுக்குத் தெருவில் கல்வெட்டுடன் கூடிய ஸ்ட்ரோம் வாட்டர் வடிகால் அமைத்தல் | 25000 | 5000 |
| 8 | பாராளுமன்ற தேர்தல் 2019 க்கான வாக்குச்சாவடிகளின் நகராட்சி பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகள், பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை வழங்குதல். | 9200 | 22023 |
| 9 | வார்டு எண்.13ல் உள்ள செங்குந்தர் நகரில் சிமென்ட் கான்கிரீட் சாலையுடன் கூடிய RCC கல்வர்ட்டின் மறு கட்டுமானம் | 1750 | – |
| | **மொத்தம்** | **95006** | **58973** |

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

மாமன்றம் அனுமதிக்கலாம் (6372/2022/பி6)

**தீர்மான எண்.1844** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**8.** இம்மாநகராட்சியில் திரு.ஆர்.தங்கவேல் ஒப்பந்ததாரர் செங்குந்தபுரம் 3வது கிராஸ், நரசிம்மபுரம் நடுத் தெரு, ஆதி மாரியம்மன் கோவில் தெரு, பசுபதிபாளையம் வடக்கு தெரு, அருணாசலம் நகர் கிராஸ் தெரு. AVB நகர் கிராஸ் தெரு, டீச்சர்ஸ் காலனி, அன்னை நகர், மற்றும் அங்கு நகர் கிராஸ் ஆகிய இடங்களில் பணிகளை மேற் கொண்டு பணிகள் முடித்தமைக்கு 1% ASD வைப்புத்தொகையினை திரும்ப வழங்க 2019–2020 ஆம் ஆண்டு காலம் கடந்த வைப்புத்தொகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டதால் தொகை ரூ.203000/– வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலகக்குறிப்பு**</u>

மாமன்றம் அனுமதிக்கலாம் (பி6/8479/2022)

**தீர்மான எண்.1845** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**9.**கரூர் மாநகராட்சி பொது சுகாதார பிரிவிற்கு வெளி கொணர்வு முகமை (Out Sourcng) மூலம் பணியாளர்கள் மற்றும் வாகனங்கள் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.35883/2022/EA-1 SWM-6. நாள்.17.02.2023ல் 2023–2024 முதல் 2025–2026 வரை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு ஆண்டுக்கு வீதம் 1915.48/–இலட்சத்தில் பணிமேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது அதனடிப்படையில் 24.03.2023ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், குறைந்த ஒப்பந்த புள்ளி அளித்துள்ள M/s.Ourland Engineering Works Pvt Ltd, Chennai அவர்களுக்கு வேலைஉத்திரவு வழங்கி பணி மேற்கொள்வதற்கு மாமன்ற தீர்மான எண்.1130, நாள் 26.06.2023ல் அனுமதிக்கப்பட்டு தற்போது மேற்படி பணியானது 30.06.2024ல் ஒப்பந்தகாலம் முடிவடைகிறது.

மேற்கண்ட பணியினை மேலும் ஓர் ஆண்டிற்கு நீட்டிப்பு செய்ய கோரி M/s Ourland Engineering works Pvt., Ltd., சென்னை அவர்களின் 06.06.2024ம் தேதியிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி பணியினை 01.07.2024 முதல் 30.06.2025ம் தேதி வரை ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும், மேலும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள விலை விகிதத்தின்படியும், நடைமுறையில் உள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு 01.07.2024 முதல் 30.06.2025ம் தேதி வரை ஓர் ஆண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1)மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி பணிக்கு பெது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் நிதி பற்றக்குறை ஏற்படின் 15வது மத்திய நிதி குழு மாநியத்தின் மூலம் செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம் (எச்1/8176/2022)

**தீர்மான எண்.1846** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**10)**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட 31 பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் மூலமாக பள்ளிகளில் பயிலும், மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவை பெற்று உரிய நேரத்தில் பரிமாறி, CMBFS Mobile APP ல் காலை 9.00 மணிக்கு அனைத்து பதிவுகளை பதிவு செய்யும் பணிகள் மேற்கொள்ளும் Food in charge staffs பணியாளர்களுக்கு செப்டம்பர் 2023 முதல் ஏப்ரல் 2024 வரையிலான 8 மாதத்திற்கு நிலையான கட்டணம் ரூ.1500/– (Fixed Payment ) வழங்க ஆகும் செலவினம் ரூ.4,80,000/–க்கு மாமன்ற தீர்மான எண்.1515, நாள்.31.10.2023ல்

ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொண்டதில், டிசம்பர் 2023 முதல் முதல் ஏப்ரல் 2024 வரை 5 மாதங்களுக்கு ராயனூார் பள்ளியில் 350க்கு மேற்பட்ட மாணவர்கள் உள்ளதால் 100 மாணவனுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் கூடுதலாக ஒரு பணியாளர் பணியமர்த்தியதின் பேரில், தற்போது வரை சம்பளச் செலவின் ரூ.4,87,500/—ஆகும் . எனவே ஏற்கனவே மாமன்றத்தில் அனுமதி பெற்ற தொகை ரூ.4,80,000/— போக கூடுதலான சம்பளத் தொகை ரூ.7500/— உரிய பணியாளர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று கூடுதல் தொகை ரூ.7500/—ஐ உரிய பணியாளர்களுக்கு வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

(இ1/9274/2023)

**தீர்மான எண்.1847** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**11)**கரூர் மாநகராட்சி புதியதாக உருவாக்கப்பட்ட மாநகராட்சியாகும். மேற்படி மாநகராட்சி நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு மாநில அரசிதழ் எண்.594 செவ்வாய்கிழமை 14.12.2021ல் வெளியிடப்பட்டுள்ளது. கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் மண்டலம் —2 அலுவலகம் இயக்குவதற்கு போதுமான இடம் இல்லாததால் திரு.பழனிச்சாமி த/பெ. மாரப்பகவுண்டர் என்பரது கரூர் வட்டம், கருர் 639001 செங்குந்தபுரம் 3வது குறுக்குத் தெரு, பழைய கதவு எண்.24, புதிய கதவு எண்.70ல் உள்ள தரை தளம் 180 ச.மீட்டர் மற்றும் முதல் தளம் 50 ச.மீட்டர் உள்ள ஆர்.சி.சி கட்டிடத்தில் மண்டலம் —2 அலுவலகம் இயங்குவதற்கு வாடகை அடிப்படையில் மாதம் ஒன்றிற்கு ரூ.40000/— வீதம் ஒரு வருட காலம் செயல்படுவதற்கு மாமன்ற தீர்மான எண்.583, நாள்.26.09.2022ல் அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி தனியார் கட்டிடத்தில் மண்டலம் —2 அலுவலகம் செயல்படும் காலம் 01.06.2024ம் தேதியுடன் முடிவடைகிறது.

எனவே மண்டலம் —2 அலுவலக கட்டிடம் 01.07.2024 முதல் ஓராண்டு காலம் மாதம் ஒன்றிற்கு வாடகை ரூ.40000/—வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.4,80,000/ற்கு அனுமதியும், மேலும் திரு பழனிச்சாமி அவர்களின் அதே அளவுள்ள கட்டிடத்தில் செயல்படுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மாமன்ற மேயர் அவர்களின் அனுமதி பெற்று 01.07.2024 மண்டலம் —2 அலுவலகம் திரு.பழனிச்சாமி அவர்களின்

கட்டிடத்தில் செயல்படுத்துவதற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்படி மண்டலம் –2 அலுவலகம் தனியார் கட்டிடத்தில் செயல்படுவதற்கான மாத வாடகையினை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/ 4366 /2024)**

**தீர்மான எண்.1848** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

12) கரூர் மாநகராட்சி மண்டலம் –2 வார்டு எண்.29 இராமானுஜம் நகர் பகுதியில் இருக்கும் சிறுபாலம் உடைந்து மழை காலங்களில் மழை நீர் செல்ல முடியாமல் தேங்கி நிற்கிறது. அவ்வாறு மழை நீர் தேங்குவதால் கொசுக்கள் உற்பத்தியாகி சுகாதார கேடு விளைவிக்கும் நிலை உருவாகிறது. எனவே மேற்கண்ட பாலத்தை புதிதாக கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.2.30 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை மாநகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி அளிக்கலாம். **(இ1/ 3096 /2024)**

**தீர்மான எண்.1849** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

13)கரூர் மாநகராட்சி புதிதாக உருவாக்கப்பட்ட மாநகராட்சியாகும். மேற்படி மாநகராட்சி நான்கு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு மாநில அரசிதழ் எண்.594 செவ்வாய்கிழமை 14.12.2021ல் வெளியிடப்பட்டுள்ளது. மாநகராட்சியின் 3 வது மண்டலம் இயக்குவதற்கு கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடம் இல்லாததால் 3வது மண்டலம் அலுவலகம் வாடகை கட்டிடத்தில் ஜுலை 2023 ஜீன் 2024 வரை ஒரு வருட காலத்திற்கு திரு.கே.தனபால், திண்ணப்பா நகர் கிழக்கு, கதவு எண்.12–பி1ல் உள்ள தரைதளம் மற்றும் முதல் மாடியில் உள்ள ஆர்.சி.சி கட்டிடத்தில் மாதம் ஒன்றிற்கு ரூ. 26250/– மற்றும் மாதத்திற்கு மின்சார கட்டணம் சுமார் ரூ.1000/– வீதம் இயங்குவதற்கு மாமன்ற தீர்மானம் எண்.1326, நாள்.27.07.2023ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி மண்டலம் –3 அலுவலகம் தனியார் கட்டிடத்தில் இயங்கும் காலம் ஜீன் 2024ம் மாதம் முடிவடைவதால் மேலும் ஜீலை 2024 முதல் டிசம்பர் 2024 வரை 6 மாத காலத்திற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.25000/–மும் மின்சார கட்டணம் 6 மாதத்திற்கு சுமார் ரூ.30000/–மும் ஆக மொத்தம் ரூ.1,80,000/–ஐ வீட்டு உரிமையாளர் கே.தனபால், கரூர் அவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.1,80,000/– மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம். **(இ1/ 4366 /2022)**

**தீர்மான எண்.1850** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**14)** கரூர் மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்படுத்தப்பட்ட வரும் பிரிண்டர்களுக்கு தேவையான டோனர்கள் கீழ்கண்டவாறு தேவைப்படுகிறது.

| Sl.No | Toner Name | Quantity |
|---|---|---|
| 1 | HP 12A | 17 Nos |
| 2 | HP 88A | 100Nos |
| 3 | TVS 132 Column Printer Cartridge | 100 Nos |
| 4 | Ink Tank L 3110 | 5 Nos |
| 5 | Epson M 3140 | 4nos |
| 6 | Pantum TL 425X | 5 Nos |
| 7 | Ricoh MP 2014C | 2 Nos |
| 8 | Epson M 15140 INK | 4 Nos |
| 9 | HP Xerox toner W1002vc | 6 Nos |
| 10 | HP 93A toner Cartridge | 1 No |

மேற்கண்ட அனைத்து வகையான டோனர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.1.60 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மாமன்றம்அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்காகும் செலவினத் தொகை ரூ.1.60 இலட்சத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்
3. மேற்படி பணிக்கு மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 10.06.2024ல் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **( இ1/1323/2024)**

**தீர்மான எண்.1851** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**15)** கரூர் மாநகராட்சியில் SFC School Improvement Grant Infrastructure work 2023–2024ம் ஆண்டின் கீழ் பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டும் பணியின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பொதுமக்கள் அறியும் வண்ணம் 08.02.2024

தேதி அன்று Flame Advertising Company Private Limited, Chennai மூலமாக மாநில அளவில் விளம்பரம் செய்ததற்கு விளம்பரக்கட்டணம் ரூ. 29400 /—ஐ Flame Advertising Company Private Limited, Chennaiஅவர்களுக்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது..

**அலுவலக குறிப்பு:**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தொகை ரூ.29400/— பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். (இ1/10913/2023)

**தீர்மான எண்.1852** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

16) கரூர் மாநகராட்சி பகுதியில் தூய்மை பாரத இயக்கம் – நகர்ப்புறம் 2.0 திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக இரண்டு எண்ணிக்கையில் 5 TPD கொள்ளளவு கொண்ட Material Recovery facilities (MRF) (துலா ஒரு இடத்திற்கு ரூ.42.50 இலட்சம் வீதம்) ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு கடிதம் எண்.6450/2024/SBM—1(2)நாள்.14.03.2024ல் நிர்வாக அனுமதியை ஏற்பதற்கான வழிமுறைகள்/ தொழில்நுட்ப அனுமதிக்கான உத்தரவுகள் வெளியிடப்பட்டுள்ளது

எனவே, கரூர் மாநகராட்சிக்குட்பட்ட வாங்கல் சாலை அரசு காலனி பகுதியில் உள்ள உரக்கிடங்கில் கிழக்கு மற்றும் தெற்கு பகுதியில் (துலா ஒரு இடத்திற்கு ரூ.42.50 இலட்சம் வீதம்) ரூ.85.00 இலட்சம் மதிப்பீட்டில் 5 TPD கொள்ளளவு கொண்ட Material Recovery facilities (MRF) அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு அரசாணை எண்.158, நகராட்சி .நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4) துறை நாள். 02.11.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கியதற்கும் மற்றும் மேற்படி பணிக்கு தூய்மை பாரத இயக்கம் (SBM) 2.0 திட்ட வழிகாட்டு நெறிமுறைகளின்படி மக்கள் தொகை ஒரு லட்சத்திற்கு மேல் இருப்பதால் இப்பணிக்கான மாநகராட்சி பங்களிப்பு தொகை 45ரூ சதவிகிதத்தை மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மாமன்றம் அனுமதிக்கலாம். ( இ1/8937 /2022)

**தீர்மான எண்.1853** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

17) பாராளுமன்ற தேர்தல் 2024ம் ஆண்டு நடைபெற இருப்பதால் கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் I, II, III மற்றும் IV ஆகிய மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 198 வாக்குசாவடி மையங்களில் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, சாய்வுதளம் அமைத்தல், மின்விளக்கு வசதி அமைத்தல் மற்றும் வாக்குச்சாவடி மையங்களின் முன்புறம் சாமியான பந்தல் அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு வாக்கு சாவடி மையங்கள் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது.

எனவே மேற்கண்ட நான்கு மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் பாராளுமன்ற தேர்தல் 2024 எவ்வித தடையுமின்றி நடைபெறுவதற்காக 198 வாக்கு சாவடி மையங்களில் மேற்கண்ட அடிப்படை வசதிகள் இல்லாத இடங்களில் , குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, சாய்வுதளம் அமைத்தல் பணி, மின்விளக்கு வசதி செய்தல் மற்றும் வாக்கு சாவடி மையங்களில் முன்புறம் சாமியான பந்தல் அமைத்தல் பணி மேற்கொள்வதற்கு கீழ்கண்டவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | மண்டலம் | வாக்கு சாவடி மையங்களின் எண்ணிக்கை | மதிப்பீட்டுத் தொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | I, | 48 | 8.90 |
| 2 | II | 59 | 9.50 |
| 3 | III | 53 | 9.40 |
| 4 | IV | 38 | 6.75 |
| | மொத்தம் | 198 | 34.55 |

எனவே மேற்கண்ட வாக்கு சாவடி மையங்களில் அடிப்படை வசதிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.34.55 லட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகையினை தற்போது மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், தேர்தல் நிதி வரப்பெற்றவுடன் ஈடு செய்து கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/ 1913 /2024)**

**தீர்மான எண்.1854** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

18)நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.4209/2024/பி3, நாள்.15.02.2024ல் தெரிவித்துள்ளதற்கிணங்க கரூர் மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் –1, வார்டு எண்.2 பெரியகுளத்துப்பாளையம் பகுதியில் உள்ள கிளை நூலகத்திற்கு வார்டு எண். 2,3,7,8

மற்றும் 9 ஆகிய பகுதிகளில் இருந்து பொதுமக்கள் அதிகளவில் வருவதால், மேற்காணும் கிளை நூலகத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுவதற்கு குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினரின் நூலகங்களை செயல்படுத்துதல் மற்றும் டிஜீட்டல் உள்கட்டமைப்பு மூலதனத்திற்காக மாநிலங்களுக்கு சிறப்பு உதவிக்கான திட்டம் 2023–2024ம் ஆண்டின் கீழ் ரூ.22.00 இலட்சத்தில் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ.22.00 இலட்சத்தை சிறப்பு உதவிக்கான திட்டம் 2023–2024ன் கீழ் மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம். **(இ1/1924/2023 )**

**தீர்மான எண்.1855** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது

**19)** கரூர் மாநகராட்சி மண்டலம் –1க்குட்பட்ட 12வது வார்டு பகுதிகளில் ஒரு வார்டில் நான்கு இடங்களில் சபா கூட்டம் நடத்தப்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. 48 இடங்கள் சபா கூட்டம் நடத்திடத் தேவையான சாமியானா பந்தல், நாற்காலிகள், மைக்செட் வசதிகள், மேட் அமைத்தல் போன்ற பணிகளை வாடகை அடிப்படையில் மேற்கொள்ள ஒரு இடத்திற்கு ரூ.10500/– வீதம் 48 இடங்களில் மேற்கொள்ளத் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5,04,000/– மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை சதவீகிதத்தில் |
|---|---|---|
| 1 | Thiru..Nagarajan, Vengamedu, Karur | 0.00% மதிப்பீட்டு விலை விகிதம் |
| 2 | Thiru.Srinivasan, Vengamedu, Karur | 2.75% அதிகம் |
| 3 | Thiru.Iniya Murugan, Vengamedu, Karur | 3.98 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் விதி 57(7)ன் கீழ் Thiru.P. Nagarajan, Vengamedu, Karur அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கி பணியினை செய்து முடித்ததற்கான செலவினத் தொகை ரூ.5,04,000/–க்கு மாநகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொண்டதையும் மாமன்றம் பதிவு செய்யலாம். **(இ1/10913/2023 )**

**தீர்மான எண்.1856 பதிவு செய்யப்பட்டது**

**20.**திருமதி.சரண்யாகுழந்தைவேல் **13**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் முன்மொழிவதாக உள்ள தீர்மானம்

**13**வது வார்டுக்குட்பட்ட சணபிரட்டி பாதையூரில் பொதுமக்களின் தேவைக்காக அரசு ஆதிதிரவிடர் நல சமுதாயகூடம் கட்டப்பட்டுள்ளது . தற்போது அதற்கு அண்ணா அரங்கம் என பெயர் மாற்றம் செய்து (பொதுப்பிரச்சனையின் காரணமாக) தர இம்மாமன்றம் தீர்மானிக்கவும்.

**தீர்மான எண்.1857** திருமதி.சரண்யாகுழந்தைவேல் **13**வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள் தாம் முன்மொழிந்து திருமதி.மஞ்சுளாபெரியசாமி **12**வது வார்டு மாமன்ற உறுப்பினர்அவர்கள் வழிமொழிந்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேயர்
கரூர் மாநகராட்சி